**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 128/2021**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஷ் என்ற சுடர் மாணிக்கம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகையா | தொழில் | : | ரேஷன் கடையில் வேலை |
| கிராமம் | : | இலத்தூர் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் இலத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ரேஷன் கடையில் வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் உடற்பயிற்சி ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 29.10.2016 ம் தேதி நானும், எனது நண்பர் மணிகண்டனும் ஆழ்வார்க்குறிச்சி கோவில் செல்வதற்காக நண்பர் நடராஜனை அவரது கடைக்கு சென்று கூப்பிடுவதற்கு சென்றிருந்தோம். அப்போது, எதிரி பாபு அத்துமீறி கடைக்குள் நுழைந்து நடராஜனிடம் "உன் அண்ணன் தானே இந்த கடையை நடத்தி வந்தான், உனக்கு இங்கு என்ன வேலை" என்று கேட்டு, உன் அண்ணன் எனக்கு தரவேண்டிய பணத்தை நீ தான் தர வேண்டும் என்று சொல்லி தேவடியா மவனே, புண்டா மவனே என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, பாபுவின் நண்பர்களான பிரவின், சொர்ணம், டேனியல் ஆகியோர்களுடன் சேர்ந்து நடராஜனை கடைக்கு வெளியே இழுத்து போட்டு, அவரின் இடது மற்றும் வலது தோள்பட்டையில் காலால்

மிதித்தார்கள். பின்பு, பக்கத்தில் கிடந்த செங்கலை பாபு சுந்தர் எடுத்து நடராஜனின் தலையில் முதலில் அடித்தார். முதலில் அடிக்கும் போது, உள்காயம் ஏற்பட்டது. 2 வது தடவையாக அடிக்கும் போது, "ஏல தேவடியா மவனே, இத்தோடு செத்து தொலை" என்று மறுபடியும் செங்கல்லால் அடித்தார். அவர் விலகிவிட்டதால் அவரின் இடது தோள்பட்டையில் பட்டு வீக்க காயம் ஏற்பட்டது. அவர் விலகவில்லை என்றால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். இந்த சம்பவத்தை பார்த்த நாங்களும், அருகில் இருந்தவர்கள் சத்தம் போடவே, எதிரிகள் நடராஜனை பார்த்து, "இன்னைக்கு தப்பித்து விட்டாய், என்னைக்கின்னாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று மிரட்டி விட்டு கிழக்கு நோக்கி ஓடிவிட்டனர். பின்பு நடராஜனை பக்கத்தில் உள்ள தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவர்கள் பார்க்க முடியாது என்று சொன்ன காரணத்தினால், தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அங்கிருந்து அவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக நடராஜன் தென்காசி அரசு மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

முதல் விசாரணையில் கூறியுள்ளதை தான் ஆய்வாளர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பெயர் சதீஷ் என்ற சுடர் மாணிக்கம் என்று தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் போலீசாரிடம் என்னுடைய ஆதார் கார்டை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் சுடர்மாணிக்கம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். சதீஷ் என்ற சுடர் மாணிக்கம் என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

ஆவணங்கள் படி என்னுடைய பெயர் சுடர்மாணிக்கம். ஆனால், ஊரில் என்னை சதீஷ் என்று தான் அழைப்பார்கள். வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாள் தீபாவளி என்றால் சரிதான்.

(நேரமின்மை காரணமாக சாட்சி விசாரணை வேறு ஒரு தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:11:22 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 128/2021**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆதினம் | தொழில் | : | வழக்கறிஞர் |
| கிராமம் | : | சீவநல்லூர் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சீவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் பகுதி நேர உடற்பயிற்சி ஆசிரியராக பள்ளக்கால்புதுக்குடியில் வேலை பார்த்தேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 29.10.2016 ம் தேதி, மாலை சுமார் 03.00 மணியளவில் நானும், என் நண்பர்களான நடராஜன், சதீஷ் என்ற சுடர் மாணிக்கம் ஆகியோர்கள் ஆழ்வார்க்குறிச்சி கோவிலுக்கு செல்வதற்காக நடராஜனின் கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். எதிரி பாபு சுந்தர் கடைக்குள் அத்து மீறி உள்ளே வந்து நடராஜனிடம் "உன் அண்ணன் எங்கே டா, உன் அண்ணன் எனக்கு பணம் தரவேண்டும், உன் அண்ணன் தான் கடையை நடத்தி வந்தான்" என்று கேட்டவுடன் நடராஜன் "எனது அண்ணன் என்னிடம் கடையை ஒப்படைத்து விட்டு வெளியூர் சென்று விட்டார்" என்று சொன்னார்.

"நீ எப்படி கடையை நடத்தலாம், உன் அண்ணன் தரவேண்டிய பணத்திற்கு நீ பணம் தா அல்லது கடையை விட்டு வெளியே சென்று விடு தேவடியா மவனே," என்று அசிங்கமாக பேசி அவரை கையை பிடித்து வெளியே இழுத்து கொண்டு வந்து பாபு சுந்தர், பெர்வின், சொர்ணம், டேனியல் ஆகியோர்கள் நடராஜனின் இரண்டு தோள்பட்டைகளிலும் மாறி, மாறி மிதித்தும், அருகிலிருந்த செங்கல்லை பாபு சுந்தர் எடுத்து நடராஜனின் பின் தலையில் ஓங்கி அடித்தார். பின்பு, திரும்ப செங்கல்லை எடுத்து நடராஜனை நோக்கி அடிக்கும் போது, அவர் விலகியதால் அவரது தோள்பட்டையில் பட்டு அவருக்கு வீக்ககாயங்கள் ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தை பார்த்த நானும், என் நண்பர் சதீஷிம், பக்கத்தில் இருந்தவர்களும் சத்தம் போடவே "இன்று நீ தப்பித்து விட்டாய், என்றைக்காவது உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" வர்மித்து கூறி கிழக்கே பார்த்து சென்று விட்டார். காயம்பட்ட நடராஜனை அருகிலுள்ள தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, "அவரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங்கள்" என்று கூறியதால், ஒரு போக்கு ஆட்டோவில் ஏற்றி தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு, அவரது அண்ணனுக்கு தகவல் சொன்னோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது, அவரை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாக தெரிந்து கொண்டேன்.

(நேரமின்மை காரணமாக எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது.)

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:11:34 +0530